# அருள் ஆனந்தர் கல்லூரி

## பழைய மாணவர் மன்றம்

# அமைப்பு விதிகள்

**A A C A A**

Scanned by CamScanner

# அமைப்பு விதிகள்

## பெயர் :

1.1. 'அருள் ஆனந்தர் கல்லூரி பழைய மாணவர் மன்றம்' என்று இம்மன்றம் அழைக்கப்பெறும். ஆங்கிலத்தில் சுருக்கமாக AACAA என்று அழைக்கப்படும்.

## நோக்கங்கள் :

2.1. பழைய மாணவர் நலனை காத்து மேம்பாடுறச் செய்தல்.

2.2. பழைய மாணவருக்கும் கல்லூரிக்குமிடையே என்றும் ஓர் இனிய தொடர்பை ஏற்படுத்துதல்.

2.3. நாட்டின் சமூக, பொருளாதார, பண்பாட்டு உயர்விற்காக அரசியல் சார்பற்ற முறையில் செயலாற்றுதல்.

## சட்ட திட்டங்கள் :

3.1. மன்றத்தின் பெயர் :

அருள் ஆனந்தர் கல்லூரி பழைய
மாணவர் மன்றம்.

3.2. முகவரி :

அருள் ஆனந்தர் கல்லூரி பழைய
மாணவர் மன்றம்,
அருள் ஆனந்தர் கல்லூரி,
கருமாத்தூர்.
மதுரை-626 514. தமிழ் நாடு.

Scanned by CamScanner

3.3. ஆண்டுக் கணிப்பு :

ஏப்ரல் முதல் நாள் தொடங்கி மார்ச் 31 முடிய உள்ள காலம்.

3.4. உறுப்பினர் தகுதி :

அருள் ஆனந்தர் கல்லூரியில் படித்த முன்னாள் மாணவர்கள்.

## உறுப்பினர் கட்டணம் :

4.1. சாதா உறுப்பினர் :

சாதாஉறுப்பினர் ஆண்டுக் கட்டணம் ரூ. 15.

இவரது உறுப்பினர் காலம் 1 ஆண்டு.

4.2. சிறப்பு உறுப்பினர் :

ரூ. 50 செலுத்தும் உறுப்பினர் சிறப்பு உறுப்பினராகக் கருதப்படுவார். இவரது உறுப்பினர் பதவிக்காலம் 10 ஆண்டுகள்

4.3. ஆயுள் உறுப்பினர் :

ரூ. 150 செலுத்தும் உறுப்பினர் ஆயுள் உறுப்பினர் ஆவார்.

## மன்ற நிர்வாக அங்கத்தினர்களும் அவர்களது கடமையும் பொறுப்பும் :

5.1. புரவலர் :

அருள் ஆனந்தர் கல்லூரியின் முதல்வர் (ex.officio) என்றும் மன்ற புரவலராக இருப்பார்

5.2. தலைவர் :

a) மன்றத்தின் தலைவராக அருள் ஆனந்தர் கல்லூரியில் பணி புரியும் ஒருவரே இப் பதவியை என்றும் வகிப்பார்.

Scanned by CamScanner

b) மன்றத்தின் செயற்குழு / பேரவைக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார்.

c) மன்றத்தின் சார்பாக வேண்டுகோள் / அறிக்கைகள் விடுவதற்கு இவருக்கு உரிமையுண்டு.

d) தலைவர் செயலரைக் கலந்து கொண்டு செயலாற்ற வேண்டும்.

5.3. துணைத் தலைவர் :

தலைவர் இல்லாத காலங்களில் அவரது பொறுப்புக்களை ஏற்பார்.

5.4. செயலர் :

a) தலைவரோடு இணைந்து மன்றத்தின் அலுவல்களை நடத்துதல்,

b) சுற்றறிக்கை விடுதல்,

c) பேரவை செயற்குழுவைக் கூட்டுதல்,

d) செயற்குழு / பேரவைக் கூட்ட நடவடிக்கைகளை தனித்தனியே பதிவு செய்தல், ஆகியவை இவரது பொறுப்புக்களாகும்.

5.5. இணைச் செயலர் :

செயலரில்லாத காலங்களில் இணைச் செயலர் செயலரது பொறுப்புகளை ஏற்று நடத்துவார்.

5.6. பொருளாளர் :

a. மன்றத்தின் பொருளாளராக அருள் ஆனந்தர் கல்லூரியில் பணி புரியும் ஒருவரே இப்பதவியை என்றும் வகிப்பார்.

b. மன்றத்தின் வரவு செலவுக் கணக்கு ஆகிய வற்றிற்கு இவரே பொறுப்பாவார்.

Scanned by CamScanner

c. ஆண்டுக்கொருமுறைவரவு-செலவுத்தணிக்கைக்கு இவர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

d. பொருளாளர் ஒவ்வோராண்டும் செயற்குழுவால் நியமிக்கப்பட்ட தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவுக் கணக்கை ஜூன் மாதத்திற்குள் செயற்குழுவில் வைத்து ஒப்புதல் பெற வேண்டும்.

e. உறுப்பினர் கட்டணத் தொகையை வசூலிப்பது பொருளாளரின் பொறுப்பாகும்.

## செயற்குழு :

6.1. மேற்கூறிய ஆறு நிர்வாக அங்கத்தினர் உட்பட 5தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்களோடு மொத்தம் 11 உறுப்பினர்களைக் கொண்டு செயற்குழு இயங்கும்.

6.2. செயற்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாக இருக்கும்.

## செயற்குழு கூட்டங்கள் :

7.1. செயற்குழு ஆண்டுக்கு இருமுறையேனும் கூட்டப்பட வேண்டும்.
தேவையான பொழுதும்,பேரவைக்கூட்டம் கூட்டப்படுவதற்கு முன்பும் செயற்குழு கூட்டப்பட வேண்டும்.

7.2. செயற் குழு கூட்டத்திற்கு புரவலரையும் சேர்த்து குறைந்த பட்சஅங்கத்தினர்களின் எண்ணிக்கை நான்காவது (4) இருக்க வேண்டும்.

Scanned by CamScanner

7.3. செயற்குழு கூட்டப்படுவதற்கு முன் குறைந்த பட்சம் 5 நாட்களாவது முன்னறிவிப்புக் கொடுத்து செயற்குழு கூட்டப்பட வேண்டும்

7.4. 7 செயற்குழு உறுப்பினர்கள் கையெழுத்திட்டு செயற்குழுவைக் கூட்ட விரும்பினுல் தலைவர் செயற்குழுவைக் கடிதம் கிடைத்த 20 நாட்களில் கூட்ட வேண்டும்

7.5. அவசர செயற்குழுக் கூட்டம் குறைந்த கால இடைவெளியில் கூட்டப்படலாம்.

## பேரவை :

8.1. அனைத்து (சாதா / சிறப்பு / ஆயுள்) உறுப்பினர்களும் சேர்ந்தது பேரவை ஆகும்.

## பேரவைக் கூட்டங்கள் :

9.1 ஆண்டுக் கொருமுறையேனும் பேரவைக் கூட்டம் கூட்டப் பட வேண்டும்.

9.2. செயற்குழுவின் ஆலோசனையின் பேரில் தலைவர் குறைந்தபட்சம் 8 நாட்கள் முன்னறிவிப்புக்கொடுத்து பேரவையைக் கூட்ட வேண்டும்

9.3. குறைந்தது மூன்றில் ஒரு பங்கு ஆயுள் உறுப்பினர்கள் அல்லது மூன்றில் ஒருபங்கு அங்கத்தினர்கள் கையெழுத்திட்டு பேரவையைக்கூட்ட வேண்டினுல் தலைவர் பேரவையைக் கடிதம் கிடைத்த 30 நாட்களில் கூட்ட வேண்டும்.

Scanned by CamScanner

11. 2. பொருளாளர் அருள் ஆனந்தர் கல்லூரி வங்கிக் கிளையில் நிதியை வைத்திருக்க வேண்டும். ஆனால் கால வைப்பு நிதிகள் செயற் குழுவால் தீர்மானிக்கப்படும் வங்கியிலோ/நிதி நிறுவனத்திலோ வைக்கப்படலாம்.

11. 3. தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்கு அறிக்கை ஆயுள் உறுப்பினர்களுக்கு அனுப்பப் பட வேண்டும். மன்ற இதழிலிலும் பிரசுரிக்கப்-பட வேண்டும்.

11. 4. மன்றம் சம்பந்தப்பட்ட எல்லாவித நிதி-நடவடிக்கைகளும் வங்கி / நிதி நிறுவனக் கணக்குகளும் தலைவர்-பொருளாளர் கூட்டுக் கணக்காக (Joint Account) இருக்க வேண்டும்.

11. 5. எல்லா வித மன்ற நிதி நடவடிக்கைகளும் வங்கி மூலமே நடை பெற வேண்டும்.

## கல்லூரியில் பயிலும் மாணவர்களும் உறுப்பினர் கட்டணமும் :

12. 1. கல்லூரி முதல்வர் அனுமதியின் பேரில் 1985-86 முதல் கல்லூரியில் பயிலும், அனைத்து இளங்கலை / முதுகலை மாணவர்களிடமிருந்தும் 10 ஆண்டுக்கால உறுப்பினர் கட்டணமாக ரூ 50 பெற்றுக் கொள்வதென தீர்மானிக்கப் பட்டுள்ளது ரூ 50 செலுத்தும் இம்மாணவர்கள் இளங்கலை/முதுநிலை இக்கல்லூரியில் முடித்த பின்பு 10 ஆண்டு மன்ற உறுப்பினராக இருப் பார்கள். மாணவர்களின் வசதியின் பொருட்டு கீழ்க்காணும் முறையில் கல்லூரி அலுவலகம் இப்பணத்தை மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு மன்ற நிர்வாகிகளிடம் ஒப்படைக்கும்.

Scanned by CamScanner

(a) இளங்கலை மாணவர்கள் முதலாண்டு ரூ 15, இரண்டாமாண்டு ரூ 15, மூன்றுமாண்டு ரூ 20. ஆக இளங்கலை முடிக்கும் ஒவ்வொரு மாணவரும் மொத்தம் ரூ 50 செலுத்துவர்.

(b) இளங்கலை வகுப்பில் இரண்டாமாண்டோ மூன்றுமாண்டோ இடையில் வந்து சேரும் மாணவர்களும் மூன்றுமாண்டு முடிக்கு முன்பு ரூ 50யை உரிய தவணைகளில் செலுத்துவார்.

(c) முதுநிலை மாணவர்கள் முதலாண்டு ரூ. 25 இரண்டாமாண்டு ரூ. 25ஆக முதுநிலை முடிக்கும் ஒவ்வொரு மாணவரும் மொத்தம் ரூ. 50. செலுத்துவார்.

12. 2. 10 ஆண்டு முடித்து மீண்டும் மன்ற உறுப்பினராக விரும்பும் மாணவர்கள் ரூ. 75 மீண்டும் கட்ட ஆயுள் உறுப்பினர் தகுதியை அடைவார். அல்லது ரூ 15யை ஒவ்வொரு ஆண்டும் கட்டி உறுப்பினர் தகுதியை புதுப்பித்துக் கொள்ளலாம்.

12. 3. இளங்கலையையும், முதுநிலையையும் இதே கல்லூரியில் முடிக்கும் மாணவர்கள் மன்றத்திற்காகச் கட்டும் மொத்தத் தொகை ரூ. 100 அவர்கள் ஆயுள் உறுப்பினராகக் கருதப்படுவர்.

## மன்ற இதழ் :

மன்றத்தின் செயல்முறைகளையும் நோக்கங்களையும் பரப்புவதற்கு ஒருஇதழ் நடத்தப்படும்.

13. 1. செயற்குழுதம்முடைய முதற்கூட்டத்தில்மன்ற இதழுக்கு கீழ்க்கண்ட நான்கு பேர் அடங்கிய ஒரு 'ஆசிரியர் குழுவை' நியமிக்க வேண்டும்.

Scanned by CamScanner

அ) மன்றத்தலைவர் நிர்வாக ஆசிரியர்.

ஆ) ஆசிரியர்

இ) இரண்டு துணை ஆசிரியர்கள்

13. 2. செயலரும், பொருளாளரும் ஆசிரியர் குழுவில் அதிகார பூர்வமற்ற உறுப்பினர்களாக இருப்பார்கள்.

13. 3. ஆசிரியர் குழுவின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

13. 4. இதழின் ஆசிரியர் / நிர்வாகஆசிரியரைக் கலந்து இதழுக்கென ஒதுக்கப்பட்ட தொகையைப் பொருளாளரிடமிருந்து பெற்றுமுறையானவரவு செலவு கணக்கை வைத்திருந்து ஒவ்வோர்-ஆண்டும் செயற்குழுவில் தணிக்கை செய்யப்பட்டு கணக்கை ஒப்புதல் பெற வேண்டும்.

13. 5. ஆறு மாதத்திற்கொரு இதழை வெளியிடல் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்புதல் ஆகியவை ஆசிரியரின் பொறுப்பாகும்.

13. 6. உறுப்பினர்களுக்கு இதழ்களை அனுப்பி வைப்பதிலும் செய்திகளைத் தருவதிலும் துணை ஆசிரியர்கள் ஆசிரியருக்கு/நிர்வாக ஆசிரியருக்கு உதவ வேண்டும்.

## மன்றப் பொறுப்பிலிருந்து விலகும் முறை :

14. 1. செயற்குழுவில் பதவி வகிப்போர் தலைவரிடம் பதவி விலகல் மனுவை சேர்க்க வேண்டும். தலைவர் அதனை செயற்குழுவில் வைத்து முடிவு எடுக்க வேண்டும்.

14. 2. தலைவர் விலகல் மனுவினை துணைத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.
துணைத் தலைவர் அதனை செயற்குழுவில் வைத்து முடிவு எடுக்க வேண்டும்.

Scanned by CamScanner

## விதியில் மாற்றம் :

15.1. பேரவை கூடி விதியில் எந்த மாற்றமும் செய்யலாம்.

15. 2 ஆனால் அதற்கு பேரவையில் வருகை புரிந்து வாக்களிப்போரில் 75 சதவிகித அங்கத்தினர் களின் ஒப்புதல் பெற வேண்டும். விதியில் மாற்றம் செய்யக் கூட்டப்படும் பேரவைக் கூட்டத்திற்கு 15 நாட்கள் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும்.

## பொது விதிகள் :

16.1. செயற் குழுவின் ஒப்புதல் இன்றி எந்த உறுப்பினரும் சுற்றறிக்கையோ துண்டுப்பிரசுரமோ அனுப்பக் கூடாது.

Scanned by CamScanner